بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

# ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில்
22 ஜனவரி 2021 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ - اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் நற்குறிப்பைத் தொடங்குகிறேன். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைக் குறத்து முதலில் நினைவில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், அன்னார் பத்ர் போரில் கலந்து கொள்ளவில்லை. இருந்தும் கூட அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் பத்ர் போரின் போர்ச் செல்வத்தில் பங்கு தரப்பட்டு, பத்ர் போரில் கலந்து கொண்டவர்கள் என்று கூறி இருந்த எட்டு பேறுபெற்ற சஹாபிகளில் ஒருவர் ஆவார்கள். அன்னார் உடைய பெயர் உஸ்மான் பின் அஃப்பான் பின் அபு ஆஸ் பின் உமையா பின் அப்தே ஷம்ஸ் பின் அப்தே மனாப் பின் குஸ்ஸி பின் கிலாப் ஆகும். இவ்வாறு அன்னாரது தலைமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தலைமுறையுடன் ஐந்தாவது நிலையில் அப்தே மனாப் இடம் சென்று முடிகிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய தாய்வழிப் பாட்டி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தந்தை ஹஸ்ரத் அப்துல்லாஹ் உடைய உடன்பிறந்த சகோதரி ஆவார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய தாயார் அர்வா பின்த் குறைஸ் என்பவர் ஹுதைபிய்யா உடன்படிக்கைக்குப் பிறகு இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார். மக்காவை விட்டு இடம் பெயர்ந்து மதீனா வந்து விட்டார். தமது மகன் உடைய கிலாஃபத் காலத்தில் தாம் மரணிக்கும் வரை மதீனாவில் இருந்தார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய தந்தையார் அறியாமைக் காலத்திலேயே மரணமடைந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகள் ருகைய்யாவை அன்னாருக்கு திருமணம் செய்து தந்தார்கள். அப்பெண்மணி பத்ர் போர் நடந்த நாள்களில் வஃபாத் ஆகி விட்டார். இதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இன்னொரு மகளாகிய உம்மு குல்ஸூம் அவர்களை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இதனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஸுன்னூரைன் (இரு ஒளிகளை உடையவர்) என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆமுல்பீல் உடைய சம்பவம் நடந்து **6** வருடங்கள் கழித்து மக்காவில் பிறந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட **5** ஆண்டுகள் இளையவராக இருந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) ஆகிய இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் வந்தார்கள். அன்னார் இருவருக்கும் இஸ்லாம் பற்றி எடுத்துக் கூறினார்கள். திருக்குர்ஆனை ஓதியும் காண்பித்தார்கள். இஸ்லாத்தின் கடமைகளைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அதன் மூலம் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் கண்ணியம் பற்றி வாக்குறுதியும் வழங்கினார்கள். உடனே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) இருவரும் ஈமான் கொண்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தினர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாரே அர்கமில் நுழையும் முன்பே முதலில் ஈமான் கொண்டவர்களில் ஒருவர் ஆவார்கள்.

இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அன்னார் மீது அநீதியிழைக்கப்பட்டது. மூஸா பின் முஹம்மத் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை

ஏற்றுக் கொண்ட போது அன்னாரது சச்சா ஹகம் பின் அபில் ஆஸ் பின் உமையா அன்னாரைப் பிடித்து கயிற்றால் கட்டினார். நீர் உமது பெற்றோருடைய மார்க்கத்தை விட்டு விட்டு புதிய மார்க்கத்தை ஏற்றுக் கொண்டீரா? நீர் உமது புதிய மார்க்கத்தை விடும் வரை நான் உம்மை அவிழ்த்து விட மாட்டேன் என்று கூறினார். உடனே ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், 'இறைவன் மீது ஆணையாக! நான் ஒருபோதும் விட மாட்டேன்; நான் அதிலிருந்து விலக மாட்டான்' என்று கூறினார்கள். ஹகம், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய மார்க்கத்தில் அவர்களின் உறுதியைப் பார்த்து விட்டு வழியில்லாமல் அன்னாரை விட்டு விட்டார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவிலேயே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகள் ஹஸ்ரத் ருகையாவை திருமணம் செய்து கொண்டார்கள். அவர்களை அழைத்துக் கொணடு அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத்தும் செய்தார்கள். ருகையா மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) இருவரும் அழகில் அவர்களுக்கு நிகராக அவர்களே இருந்தார்கள். எனவே, அஹ்ஸன ஸவ்ஜனி ராஅஹுமா இன்ஸானு ருகையத்து வ ஸவ்ஜுஹா உஸ்மான் – மிக அழகிய ஜோடியை ஒரு மனிதன் பார்த்திருக்கிறான் என்றால், அது ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) மற்றும் அவரது கணவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆவர்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் உஸ்மான் குறைஷியிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது மகளது வீட்டிற்குச் சென்றார்கள். அப்போது அவர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய தலையைக் கழுவிக் கொண்டிருந்தார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மகளே! அபூ அப்தில்லாஹ் உடன் மிக நல்ல முறையில் நடந்து கொள். நிச்சயமாக அவர் எனது சஹாபாக்களில் நல்லொழுக்க அடிப்படையில் என்னுடன் எல்லாரையும் விட அதிகம் ஒப்புமை பெற்றவர் ஆவார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு சோதனை ஏற்படுவதைப் பார்த்தார்கள். உடனே அன்னார் சஹாபிகளிடம் கூறினார்கள்: நீங்கள் அபிஸீனியா நாட்டிற்குச் செல்லுங்கள். அங்கு ஓர் அரசர் இருக்கிறார். அவருக்கு முன் எவர் மீதும் அநீதியிழைக்கப்படுவதில்லை. அது ஓர் உண்மையான பூமியாக இருக்கிறது. இது இஸ்லாத்தில் நடந்த முதல் ஹிஜ்ரத் ஆகும். அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்த சஹாபாக்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் அவரது மனைவி ஹஸ்ரத் ருகைய்யா பின்த் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) ஆகியோரும் இருந்தனர்.

ஹஸ்ரத் ஸஅத் அறிவிக்கிறார். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அபிஸீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தபோது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ருகைய்யா (ரலி) அவர்களையும் உடன் அழைத்துச் செல்லுங்கள். அதனால் ஒருவருக்கொருவர் உங்கள் மனோதைரியத்தை அதிகரித்துக் கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அபூபக்கரே! ஹஸ்ரத் லூத் (அலை), ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) ஆகியோருக்குப் பிறகு இவ்விருவரும் முதலில் ஹிஜ்ரத் செய்தவர்கள் ஆவர். அபிஸீனியாவிலிருந்து அவர்கள் திரும்பி வந்த செய்தியும் ஹதீஸில் உள்ளது. இப்னு இஸ்ஹாக் கூறுகிறார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய சஹாபாக்கள் அபிஸீனியா நோக்கி ஹிஜ்ரத் செய்தார்கள். உடனே அவர்களுக்கு மக்காவாசிகள் ஈமான் கொண்டு விட்டதாக ஒரு செய்தி கிடைத்தது. உடனே அந்த முஹாஜிரீன் மக்கா நோக்கி திரும்பி வந்தார்கள். மக்காவுக்கு அருகில் வந்ததும் தமக்கு வந்த செய்தி தவறு என்று தெரிய வந்தது. அவர்களுடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் வந்தார்கள். வந்து சேர்ந்த பிறகு செய்தி பொய்யானது என்று தெரிய வந்தது. உடனே சில சஹாபாக்கள் மீண்டும் அபிஸீனியா திரும்பிச் சென்றார்கள். உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவிலேயே இருந்தார்கள். மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும் ஏற்பாடுகள் நடக்கும் வரை மக்காவிலேயே தங்கி விட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எல்லா சஹாபாக்களையும் மதீனா செல்லுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் தமது குடும்பத்துடன் மதீனா திரும்பினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய மதீனா பயணம் மற்றும் சகோதரத்துவம் பற்றி இவ்வாறு செய்தி கிடைத்துள்ளது. முஹம்மத் பின் ஜாபர் பின் ஸுபைர் (ரலி)

அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) இருவருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சகோதரத்துவம் ஏற்படுத்தினார்கள்.

இன்னோர் அறிவிப்பின்படி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடைய சகோதரத்துவத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடனேயே வைத்துக் கொண்டார்கள். இந்த வகையில் திப்காத்தே குப்ராவில் எழுதப்பட்டுள்ளது. இப்னு லிபிவ்வா அறிவிக்கிறார். ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களை இறுதி நாட்களில் எதிரிகள் முற்றுகையிட்டு விட்டனர். எல்லாப் புறமும் தடுத்து விட்டனர். அன்னார் ஓர் உயரமான ஓர் இடுக்கு வழியாக, உங்கள் மத்தியில் தல்ஹா இருக்கிறாரா? என்று கேட்டார்கள். மக்கள் ஆம் என்றனர். அன்னார், அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கேட்கிறேன். உங்களுக்கு தெரியும் அல்லவா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிரீன் அன்ஸார் இருவருக்கும் சகோதரத்துவம் ஏற்படுத்தியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடன் என்னை சகோதரத்துவப்படுத்திக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை சகோதரத்துவத்தில் வைத்துக் கொண்டார்கள். இதனைக் கூறியதும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் வல்லாஹி – இது சரிதான் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ருகைய்யாவின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்பான் (ரலி) அவர்களுக்கு தமது மகளான உம்மு குல்ஸூம் அவர்களை திருமணம் செய்து தந்தார்கள். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களைப் பள்ளிவாசலின் வாயிலில் சந்தித்தார்கள். அவர்கள் கூறினார்கள்: உஸ்மான்! இவர்கள் ஜிப்ரீல் ஆவார்கள். இவர்கள் என்னிடம், அல்லாஹ் உம்மு குல்ஸூமுடைய நிக்காஹ்வை ருகைய்யாவுக்கு வழங்கப்பட்ட மஹர் அளவு மஹர் தொகையோடு, மேலும் ருகய்யாவுக்கு நீங்கள் செய்த நன்மகளின் அடிப்படையில் உங்களோடு செய்து வைத்து விட்டதாகக் கூறினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் உடைய திருமணத்தை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் செய்து வைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உம்மே அய்மனிடம் கூறினார்கள். எனது மகள் உம்மு குல்ஸூமை ஆயத்தப்படுத்தி உஸ்மான் (ரலி) இடம் விட்டு வாருங்கள். அத்துடன் தஃப் (பறை) அடிக்கவும். அன்னார் அவ்வாறே செய்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூன்று நாள்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் இடம் வந்து, எனது அன்பு மகளே! நீ உனது கணவரை எவ்வாறு பெற்றாய்? என்றதும் ஹஸ்ரத் உம்மு குல்ஸூம், அவர் மிகச் சிறந்த கணவர் என்று கூறினார். ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் ஹிஜ்ரி 9 வரை இருந்தார்கள். பிறகு நோயுற்று மரணித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழ வைத்தார்கள். அவர்களது கபருக்கு அருகில் அமர்ந்தார்கள். அன்னாரின் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) மரணமடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனக்கு மூன்றாவது ஒரு மகள் இருந்திருந்தால் அவரையும் நான் உஸ்மான் (ரலி) அவர்களுக்குத் திருமணம் முடித்துத் தந்திருப்பேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஓரிடத்தில் செல்லும்போது பார்த்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அங்கு அமர்ந்திருந்தார்கள். உம்மு குல்ஸூம் பின்த் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய மரணம் குறித்து அழுது கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், உஸ்மான் ஏன் அழுகிறீர்? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனக்கு உங்களுடன் இருந்த மருமகன் உறவு முடிந்து விட்டதே? அதனால் அழுகிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அழாதீர். எனது உயிர் எவன் கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! எனக்கு 100 மகள்கள் இருந்து அதில் ஒவ்வொருவராக மரணித்தாலும் ஒவ்வொருவருக்குப் பிறகும் இன்னொருவர் என்று ஒருவர் பாக்கியின்றி அனைவரையும் உமக்குத் திருமணம் முடித்துத் தந்திருப்பேன்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: மேற்கொண்டு குறிப்புகள் பின்னால் தரப்படும். நான் ஒவ்வொரு ஜுமுஆவிலும் கூறுவது போன்றும் கவனமூட்டுவது போன்றும் பாகிஸ்தான் மக்கள் மற்றும் அஹ்மதிகளுக்காக துஆ செய்யுங்கள். எதிரிகள் தமது தரப்பில் வட்டத்தை சுருக்கிக் கொண்டே செல்கிறார்கள். அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு மேல் ஒருவன் இருக்கிறான். இறைவன் இருக்கிறான். அவனுடைய வல்லமையும் செயல்படுகிறது. அவனால் அவர்களின் வட்டமும் மறுபுறம் சுருங்கிக் கொண்டே செல்கிறது. பிறகு அவர்களுக்கு ஓடும் இடம் எதுவும் இருக்காது. அல்லாஹ் இவர்களுக்கு அறிவைத் தருவானாக. இம்மக்கள் இப்போது கூட அறிவைப் பயன்படுத்துவார்களாக. நீதியைப் பயன்படுத்துவார்களாக. காரணமற்ற அநீதி, காட்டுமிராண்டித்தனங்களை விடுவார்களாக. அதுபோன்று அல்ஜீரியாவுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் ஈமான் மற்றும் நிம்மதியுடன் வாழ வேண்டும். அதுபோன்று இன்னும் பல இடங்களிலும் அஹ்மதிகளுக்கு எதிர்ப்பு மிக அதிகமாக உள்ளது. அல்லாஹ் எல்லா இடத்திலும் ஒவ்வோர் அஹ்மதிக்கும் எல்லா வகையிலும் பாதுகாப்பு வழங்குவானாக.

தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். அவர்களின் குறிப்பைக் கூறுகிறேன். முதல் குறிப்பு ரப்வாவின் முன்னாள் நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா கண்ணியத்திற்குரிய மவ்லானா சுல்தான் மஹ்மூத் அன்வர் சாஹிப்.

இரண்டாவது ஜனாஸா காதியானின் முன்னாள் நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா கண்ணியத்திற்குரிய மவ்லானா முஹம்மத் உமர் சாஹிப்.

அடுத்த ஜனாஸா ரப்வாவின் முரப்பி ஸில்ஸிலா கண்ணியத்திற்குரிய ஹபீப் அஹ்மது சாஹிப்.

அடுத்த ஜனாஸா யூ.கே –வின் வகாலத்தே மால் கண்ணியத்திற்குரிய பதருஸ் ஸமான் சாஹிப்.

அடுத்த ஜனாஸா ரப்வாவின் கண்ணியத்திற்குரிய மன்சூர் அஹ்மது தஹ்ஸீன் சாஹிப்.

அடுத்த ஜனாஸா தன்ஸானியாவின் கண்ணியத்திற்குரிய டாக்டர் அய்தி இப்ராஹீம் மவான்கா சாஹிப்.

அடுத்த ஜனாஸா சுகுரா பேகம் சாஹிபா. இவர் காதியானின் தீன் முஹம்மது சாஹிப் நன்கிலி தர்வேஷ் உடைய மனைவி ஆவார்.

அடுத்த ஜனாஸா யூ.கே –வின் கண்ணியத்திற்குரிய சவுத்ரி கராமத்துல்லாஹ் சாஹிப்.

அடுத்த ஜனாஸா ஜெர்முனியின் சவுத்ரி முனவ்வர் அஹ்மத் காலித் சாஹிப். அடுத்த ஜனாஸா பங்களாதேஷின் நஸீரா பேகம் சாஹிபா.

அடுத்த ஜனாஸா ரபிவுத்தீன் பட் சாஹிப்.

ஹுஸூர் அவர்கள் இவர்கள் அனைவரின் நற்குறிப்பை எடுத்து வைத்தார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் இந்த மர்ஹூம்கள் அனைவரின் அந்தஸ்தையும் உயர்த்துவானாக. தமது அன்பவர்களுக்கு அருகில் இடமளிப்பானாக.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ
اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ
لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ. عِبَادَ اللّٰهِ رحمكم الله اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ
وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ
اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ.

**மொழியாக்கம்: முஅல்லிம் நிஸாமுத்தீன்**